**பெல்மதுள்ள பிரதேச சபையின் 2026.06.10 ஆம் திகதி நடைபெற்ற பொது சபைக் கூட்டத்தின் அறிக்கை**

பெல்மதுள்ள பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டம் 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் தலைமையில் பிரதேச சபையின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு கீழ் பெயர் குறிப்பிடப்பட்டு உள்ள கொரவ பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

| | |
|---|---|
| 02. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன |
| 03. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.டி.டப்ளிவ். சோமரத்ன |
| 04. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன |
| 05. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அபேவர்தன |
| 06. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே.ஜீ. சந்திரலால் |
| 07. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே |
| 08. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க |
| 09. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார |
| 10. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே. சுசன்த்த பிரேமகுமார |
| 11. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ரீ.கே. சம்பத் சிறிசான்த்த |
| 12. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார |
| 13. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன |
| 14. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. எம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட |
| 15. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க |
| 16. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி |
| 17. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. ரீ. சிறியானி ஜானகி பீரிஸ் |
| 18. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. இராஜரத்தினம் புவனேஸ்வரி |
| 19. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. எம். பிரதீபா இந்துமிணி குலரத்ன |
| 20. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. வெரங்ஜா காமனி விஜேரத்தின |
| 21. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ்.டப்ளிவ். மொஹான் மஞ்சுல |
| 22. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஆர். திசோக் |
| 23. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே. சான்த புஸ்பகுமார குடாவத்த |
| 24. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப். ஜெகன் மோஹன் |
| 25. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா |
| 26. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. எச். ஞானலதா ஹப்புதன்த்திரி |
| 27. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. எச்.எம். சரத் உஷான் மஹனாம |
| 28. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர |
| 29. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப். வசன்த குமாரசிறி |
| 30. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர |
| 31. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஜீ.கே. சுமேத லக்மால் |
| 32. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஜீ. இந்திக்க குமார |
| 33. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப். இந்திக உதயகுமார குணவர்தன |
| 34. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. மயூரி சத்துரிகா பரணமான்ன |

வருகைதந்து இருந்த அனைவரும் தமது சமய அனுட்டானங்களை பின்பற்றி, கூட்டத்திற்கு வருகைதந்து இருக்கும் கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட ஆளும் கட்சி எதிர் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர் அனைவரையும் கௌரவ தலைவர் அவர்கள் வரவேற்றதுடன், பின்னர் கூட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

01. 2026.05.13 **பொது சபைக் கூட்ட அறிக்கை சபையில் நிறைவேற்றிக் கொள்ளல்.**

2026.05.13 ஆம் திகதி நடைபெற்ற பொது சபை கூட்ட அறிக்கையை சபையில் நிறைவேற்றுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா அவர்கள் ஆமோதித்ததன் பின்னர் ஏகமனதாக சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பொது சபையில் எடுக்கப்படும் முடிவுகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மேம்பாடுகள் தொடர்பில் அந்த பிரேரணையை முன்வைத்த கௌரவ பிரதேச சபை உறுப்பனர் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

**02. கௌரவ தலைவர் அவர்களினால் சபைக்கு முன்வைக்க வேண்டிய அறிவித்தல்கள். –**

கடந்த மாதத்தினுள் வெசக் வாரம் நடைபெற்றதாகவும், உள்ளூராட்சி மன்ற திணைக்களம் மூலம் வெசக் வரம் நடாத்தப்படுவது தொடர்பான வழிகாட்டல்களின் கீழ் பிரதேச சபையின் நூலகம், 02 பாடசாலைகளை முதன்மைப் படுத்தி நச்சுப் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 02 மாரபன வித்தியாலத்தில் மற்றும் பாதகட பௌத்த வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டன என்றும், அதற்கு மேலதிகமாக வீதிப்பயணிப் போக்குவதர்து அதிகார சபையின் ஊழியர்களுடன் ஒன்றுசேர்ந்து ஒருங்கிணைந்த பஸ்வண்டிகள் நிறுத்துமிடத்தை சுத்தம் செய்ததாகவும், பஹல போபிட்டிய விஹாரை ஏற்பாடு செய்திருந்த வெசத் பக்திப் பாடல்கள் நிகழ்ச்சியில் பங்குபற்றி கௌரச பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை ஊழியர்கள் சேர்ந்து பக்திப் பாடல்கள் பாடியதாகவும், இது தொடர்பாக நன்றிகள் தெரிவிக்கப்பட்டது. பிரதேச சபை மேற்கொள்ளும் வேலைத் திட்டங்கள் அரசியல் கட்சிகளினால் மேற்கொள்ளும் நிகழ்ச்சிகள் அல்ல அவை பிரதேச சபையின் மூலம் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் என்றும் அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் கௌரச பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக கூறப்பட்டது.

தற்போது எங்களிடம் காணப்படும் வாகனங்களில் மிகவும் பழைய வாகனங்கள் காணப்படுவதாகவும், தற்போது ஒரு திறக்டர் மட்டும் செயற்பாட்டு நிலையில் காணப்படுவதாகவும், சில வாகனங்கள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் இந்த சேவைகளில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன என்றும், உரிய நேரங்களில் வாகனங்கள் மற்றும் ஏனைய வசதிகள் தொடர்பில் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன என்று கூறப்பட்டது.

பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் டெங்கு நோய் தொற்றிய அதிகமான நோயாளர்கள் காணப்படுவதால் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் பிரதேச சபை ஒருங்கிணைந்து வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும், பெரண்டுவ மற்றும் வெலிமலுவ பிரிவுகளில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும், கள ஆய்வுகள் மேற்கொண்டு தெளிவுபடுத்தல்கள் செய்து அத்துடன் வழக்குகள் பதிவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு

வருகின்றன என்றும், இதுவரை 30 வழக்குகள் வரை பதியப்பட்டு உள்ளன என்றும் வருங்காலத்தில் பிரதேச சபை உறுப்பினர்ளின் தொகுதிகளுக்கு வருகை தரக்கூடும் என்பதால் அது தொடர்பாக அவதானத்தை செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது.

அரச நிர்வாக மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள குட்டபிட்டிய வத்த பங்குவ பாலத்தை நிர்மாணித்தல் திட்டத்திற்கு டென்டர் கமிட்டியாக 2026 ஆம் ஆண்டு யனவரி மாதம் 14 ஆம் திகதி பொது சபை முடிவுகள் இலக்கம் 02 இற்கு ஏற்ப நியமிக்கப்பட்ட விலைமனுகோரல் கமிட்யை பயன்படுத்திக் கொள்வது என்று தெரிவிக்கப்பட்டது.

பெல்மதுள்ள பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதி கூற்றுக்கள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) உட்பிரிவின் பிரகாரம் கணக்காளர் நாயகத்தின் தர்கரீதியான கருத்து முன்வைக்கப்பட்டு உள்ளது என்று சபை தெரிந்துகொள்வதற்காக முன்வைக்கப்பட்டது.

மு.ப. 10.20 இற்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்கள் கௌரவ சபைக்கு சமூகமளித்தார்.

பெரண்டுவ தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்திய கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர அவர்கள் தனிப்பட்ட காரணங்களினால் பிரதேச சபை உறுப்பினர் பதிவியை இராஜினாமா செய்து உள்ளார் என்றும், இதற்கு முன் ஐக்கிய மக்கள் சக்தியின் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தனது பதிவியை இராஜினாமா செய்து உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு பிரதேச சபைகள் சட்டம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அதில் பாரிய அளவிலான வேலைத் திட்டங்கள் கௌரவ பிரதேச சபை உறுப்பினர்களுக்கு இருப்பதால் இலங்கையில் பிரதேச சபைகளில் ஆளும்கட்சி எதிர்கட்சி அனைத்து உறுப்பினர்களுள் அதிகளவிலான உறுப்பினர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும், பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் ஆனாலும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆனாலும் சமமான நிலையில் செயற்பாடுகள் காணப்பட்டு இருந்தன என்றும், ரூ. 15,000.00 தொகையானது சம்பளம் அல்ல ஒரு கொடுப்பனவு என்றும், கௌரவ பிரதேச சபை உறுப்பினர்கள் இந்த சமூகத்தில் வாழும் ஒரு பிரிவினர் என்ற ரீதியில் பார்க்கும் போது அரசியல்வாதி என்ற நபருக்கு அனைத்து வேலைகளும் குறிக்கோல்களாக அமையப்பட்டு உள்ளன என்பதால் சமூகத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களுக்கு அழைப்புக்கள் வருகின்றன என்றும், தமது சொந்த செலவுகளில் அந்த சந்தர்ப்பங்களுக்கு கலந்துகொள்ளவேண்டி ஏற்படுகின்றன என்றும் மற்றும் அந்த சந்தர்ப்பங்களில் பண ரீதியான பங்களிப்பு செய்யவேண்டி ஏற்படுகின்றன என்றும், இந்த நிலையில் பிரதேச சபை உறுப்பினர்கள் சிக்கலான சந்தர்ப்பங்களுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்றனர் என்றும், இதன் காரணமாக எனது தனிப்பட்ட கருத்து என்னவென்றால் இதை விட அதிகமான கொடுப்பனவும் தொகை ஒன்று வழங்கப்பட வேண்டும் என்பதாகும் என்றும், அதன் அடிப்படையில் பொது சபையில் கருத்துக்கள் பெறப்பட்டு இந்த கொடுப்பனவை அதிகதித்துக் கொள்வது தொடர்பில் பெல்மதுள்ள பிரதேச சபையின் பிரேரணை ஒன்றாக உள்ளூராட்சி மன்ற அமைச்சருக்கு கோரிக்கை ஒன்று முன்வைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும், நிர்வாக நிறுவனங்கள் மீது முன்வைக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்கு முன்வைக்கப்படும் சாத்தியம் உள்ளன என்றும் மற்றும் இடர் நிலமைகளின் போதும் முதலில் அறிவிப்பது பொதுமக்கள் பிரதிநிதிகளை ஆகும். அது பொதுமக்களின் மனதில் காணப்படும் ஒருவகையான திரிப்பு என்றும், அதற்கு உரிய நிறுவனங்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், பிரதேச செயலகங்கள் போன்றவற்றின் ஊழியர்களுக்கு பயிற்சிகள், சம்பளங்கள், நிறுவன வளங்கள் வழங்கப்பட்டாலும் இந்த பிரச்சினைகள் முன்வைக்கப்படுவது பிரதேச சபை உறுப்பினர்களுக்கு என்றும், இந்த சமூகம் போதியளவு தெளிவுகள் இல்லாமல் காணப்படுவதால் இந்த நிலை காணப்படுவதாகவும், எங்களுக்கு பிரச்சனைகளை பிரதேச சபை சட்டத்தின் எல்லைகளுக்குள் மாத்திரம் தீர்வுகான முடியும் என்றும், இது திருத்தப்பட வேண்டும் என்றும், அந்த நிலையில் கிடைக்கவேண்டிய பெறுவனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும், இராஜினாமா செய்துள்ள 02 பிரதேச சபை உறுப்பினர்களும் தமது உழைப்பை பணத்தை தியாகம் செய்து சபைக்கு வருகை தந்து பெற்றுக்கொடுத்த உதவிகளுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக கூறப்பட்டது.

பொலன்நறுவை மற்றும் அனுராதபுரம் போன்ற உள்ளூராட்சி மன்றங்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொண்ட போது அந்த அபிவிருத்தி பணிகள் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கும் என்றும் மீண்டும் மீண்டும் அந்த அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு அவசியம் ஏற்படுவது இல்லை என்றும், எங்களைப் போன்ற உள்ளூராட்சி மன்றம் ஒன்று அபிவிருத்தி செய்யும் வீதிகள் தொடந்து உடைகின்றன, புதைகின்றன, குழிகள் ஏற்படுகின்றன, அப்போது வேறு உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளப்படும் ஒரு அபிவிருத்தி பணிக்கு நாங்கள் அடிக்கடி பணிகள் மேற்கொள்வதற்கு ஏற்படுகின்றன என்றும், மாணிக்கக்கல் கைத்தொழில் காரணமாக வீதிகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படும் நிலை காணப்படுவதாகவும், உள்ளூராட்சி மன்றம் ஒன்றின் வளர்ச்சியை அளவிடும் போது நாங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாகவும், வீதி ஒன்றை அடிக்கடி அபிவிருத்தி செய்வது நடைபெற்று வருகிறது என்றும், உதாரணமாக பனாவென்ன பகுதியில் வீதி ஒன்றில் 150அடிகளில் இருந்து 200 அடிகள் வரை முழுமையாக குழிகள் ஏற்பட்டு வீதி புதையுண்டு உள்ளது என்றும், தற்போது மிக அருகிய காலத்தில் இன்னும் ஒரு பகுதி புதையுண்டு உள்ளது என்றும், அதற்கு அப்பால் உள்ள பகுதி நேற்று இன்று செய்தது போல் உள்ளது என்றும், வீதியின் இரு புறங்களிலும் ஒரு குழி கூட இல்லை என்றும், இதற்கான காரணத்தை வினவிய போது அந்த இடத்தில் மாணிக்கக்கல் சுரங்கம் ஒன்று தோண்டப்பட்டு இருந்தது என்றும், அதன்போது இந்த வீதி புதையுண்டு போனது என்றும், இந்த மாணிக்கக்கல் சுரங்கம் தொடர்பாக ஊரில் எவரும் எதிர்ப்பு தெரிவித்து இல்லை என்றும், அந்த ஊர் மக்கள் இந்த வீதியை அபிவிருத்தி செய்து தருமாறு கோரிக்கை விடுத்து உள்ளனர் என்றும், இது உள்ளூராட்சி மன்றம் ஒன்று என்ற ரீதியில் நாங்கள் எதிர்நோக்கும் நெருக்கடி என்பதால் பிரதேச சபை உறுப்பினர்கள் என்ற ரீதியில் இந்த நடவடிக்கையின் போது நேரடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், ஏதேனும் நடவடிக்கைகள் மூலம் எங்களுடைய சொத்துக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்றால் உடனடியாக பொது சபைக்கு தெரியப்படுத்துமாறும் அப்போது அந்த செயலை நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் என்றும், இல்லை என்றால் அந்த பணிக்கு பொது மக்களின் பணம் செலவு செய்வதற்கு வேண்டிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது காணப்படும் ஐந்து வருட (2022 – 2026) மூலோபாய திட்டம் 2026 ஆம் ஆண்டுடன் முடிவுக்கு வருகிறது. வருடாந்த செயற்பாட்டு திட்டம் மற்றும் நடுத்தர கால திட்டம் போன்றன தயாரிக்கப்படுவது இந்த ஐந்து வருட ஒருங்கிணைந்த மூலோபாய திட்டத்திற்கு ஏற்ப ஆகும். பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் வாழும் பொது மக்களின் தேவைகள் மற்றும் பொது மக்களுக்கு ஆற்றவேண்டிய சேவைகள் முதன்மைபடுத்தி அதற்காக நிறுவனத்தினுள் காணப்படும் தேவைகள் பூர்த்தி செய்துகொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் பிரதேச சபையினால் ஆற்ற வேண்டிய சேவைகள் தொடர்பான விடயங்களை உள்ளடக்கி இந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்றும்,

அதன் அடிப்படையில் 2027 – 2030 வரையிலான மூலோபாய திட்டம் 2026.12.31 ஆம் திகதிக்கு முன் தயாரிக்கப்படல் வேண்டும். அதற்காக கலந்தரையாடல் மூலம் தகவல்கள் பெறப்பட வேண்டி உள்ளது என்பதால் 2026.06.10 ஆம் திததி பொது சபை கூட்டத்தின் பின் சிறிது நேரம் இருக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

## 03. பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்காமை தொடர்பாக அனுமதி பெறல் சம்பந்தமான பிரேரணை

வைத்திய காரணங்களினால் பொது சபை கூட்டத்திற்கு சமூகம் அளிக்க முடியாது என்று அறிவித்துள்ள கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. ஆர். தனேஸ் குமரன் அவர்களின் லீவு அனுமதிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக்க அவர்கள் ஆமோதித்தார்.

தனிப்பட்ட காரணங்களினால் பொது சபை கூட்டத்திற்கு சமூகம் அளிக்க முடியாது என்று அறிவித்துள்ள கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்ன அவர்களின் லீவு அனுமதிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்கள் ஆமோதித்தார்.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர சபை கூட்டத்திற்கு வருகை தராததால் அவரின் லீவு அனுமதி அளிக்கப்படவில்லை.

04. **கௌரவ சபைக்கு அனுப்பப்பட்டுள்ள நினைவுக்குறிப்புக்கள், பொதுமக்களின் புகார்கள், முறைப்பாடுகள் பொது சபைக்கு முன்வைத்தல் :-**

**05. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிணக்குகள் :- இல்லை**

**06. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிரேரணைகள்**

1. **கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் பிரேரணைகள்**

1. மாரபன அலுவலகத்தில் ஏக்கர் வரி ஆவணத்தில் ஏக்கர் வரி இலக்கம் 36 இன் கீழ் குறிப்பிடப்பட்டு இருக்கும் எஸ்.ஜே. எலிஸ்நோனா என்ற பெயரை நீக்கி அதன் தற்போதைய உரிமையாளரான ஆர்.ஏ.சீ.ஆர். பெரேரா என்ற பெயரை உள்ளடக்குவது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

இது தொடர்பாக வினவிய சந்தர்ப்பத்தில் ஏக்கர் வரி இலக்கம் 36 இன் கீழ் குறிப்பிடப்பட்டு இருக்கும் எஸ்.ஜே. எலிஸ்நோனா என்ற நபர் இறந்துள்ளார் என்றும், அதன் அடிப்படையில் அவரின் குடும்ப உறுப்பினர்கள் தமது சுய விருப்பங்களை தெரிவித்து கடிதம் மற்றம் ஆவணங்கள் முன்வைத்து உள்ளனர் என்றும், ஆர்.ஏ.சீ.ஆர். பெரேரா என்பவர் மகளின் கணவர் என்றும் அவர் ஏக்கர் வரி ஆவணத்தில் தற்போதைய உரிமையாளராக திருத்தப்பட்ட பெயரை உள்ளடக்குமாறு விண்ணப்பித்து உள்ளார் என்றும், மேலும் தகவல்கள் தேவைப்படின் விடய உத்தியோகத்தர் ஊடாக தெரிந்துகொள்ள முடியும் என்று கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

இந்த பிரேரணை தொடர்பாக தெளிவுபடுத்தல் தேவை என்பதால் கௌரவ பொதுச் சபையை செயற்பாட்டுக் குழுவாக நியமிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்தின அவர்கள் ஆமோதித்தார். (மு.ப. 10.45)

விடய உத்தியோகத்தரிடம் விசாரிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், செயற்பாட்டுக் குழவை பொதுச் சபையாக கருதவேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்தின அவர்கள் ஆமோதித்தார். (மு.ப. 11.05)

**முடிவுகள் இலக்கம் 01**

மாரபன அலுவலகத்தில் ஏக்கர் வரி ஆவணத்தில் ஏக்கர் வரி இலக்கம் 36 இன் கீழ் குறிப்பிடப்பட்டு இருக்கும் எஸ்.ஜே. எலிஸ்நோனா என்ற பெயரை நீக்கி அதன் தற்போதைய உரிமையாளரான ஆர்.ஏ.சீ.ஆர். பெரேரா என்ற பெயரை உள்ளடக்குவதற்கு முன் இந்த பிரேரணையை வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி கமிட்டிக்கு முன்வைத்து முறையாக ஆய்வு செய்து அடுத்த பொது சபை கூட்டத்திற்கு பரிந்துரைகள் முன்வைப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

02. பெல்மதுள்ள பிரதேச சபையின் கல்லுலுவச்ஸாஹேன காணியில் அத்துமீறி வசிக்கும் 08 நபர்களிடம் இருந்து அவர்கள் அனுபவிக்கும் காணியின் அளவிற்கு வருடாந்த காணி வரி அறவிட்டுக்கொள்வது தொடர்பாக முடிவு ஒன்றை எடுப்பதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கல்லுலுவச்ஸாஹேன காணியில் நில அளவை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும், 03 ரூட் 20 பர்ச்சஸ் அளவு இருந்ததாகவும், அதன் அடிப்படையில் குப்பைகள் கொட்டிய காலத்தில் குப்பைகள் கொட்டப்பட்ட இடத்தை விட்டு பள்ளமாக காணப்பட்ட இடத்தில் 08 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு உள்ளன என்றும், இது தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளூராட்சிமன்ற ஆணையாளரிடம் விசாரித்த போது அதற்கு உள்ளூராட்சிமன்றம் என்ற ரீதியில் கருத்துக்கள் தெரிவிக்க வேண்டும் என்றும், அதற்கு முன் எங்களிடம் 02 கருத்துக்கள் விசாரிக்கப்பட்டது என்றும், அதாவது இங்கு வாழும் நபர்கள் தொடர்பில் அவர்களின் காணிகள் அமைந்துள்ள இடம் தொடர்பான திட்ட வரைபடம் ஒன்று முன்வைக்கப்படல் வேண்டும் என்றும் மற்றும் கௌரவ பொது சபையின் அனுமதி எழுத்து மூலம் தேவை என்றும், காணி வரி அறவிடுவது தொடர்பில் வினவவில்லை என்றும், இந்த அத்துமீறிய வதிவிடதாரர்கள் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக வழிகாட்டல்கள் பற்றி விசாரித்தாகவும், நாங்கள் பிரதேச சபை என்ற ரீதியில் முடிவு எடுக்க வேண்டும் என்றும், எங்கள் கைவசம் உள்ள 64 மயானபூமிகள் பட்டியல் இடப்பட்டு உள்ளன என்றும், அவற்றில் நாற்பதிற்கு அதிகமான மயானபூமிகள் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டில் உள்ளன என்றும் அவற்றை பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டு இல்லை என்றும் அந் நிறுவனம் அவற்றை உரிய முறையில் அளந்து பிரதேச சபைக்கு கையளிக்க வேண்டும் என்றும், சில பகுதிகள் சில நபர்களினால் அத்துமீறி அபகரிக்கப்பட்டு உள்ளன என்றும் இது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது என்றும் இந்நிலை காணப்படுவதற்கு காரணம் இவை சட்ட ரீதியாக இல்லை என்னதால் ஆகும். இந்த கல்லுலுவச்ஸாஹேன காணி 1958 ஆம் ஆண்டில் சட்டரீதியாக கையளிக்கப்பட்ட காணி ஒன்று ஆகும் என்றும், இந்த காணியை முறைப்படுத்துவது அவசியம் என்றும் அப்படி இல்லை என்றால் இந்த காணி கைவிட்டுப் போகும் வாய்ப்புக்கள் உள்ளன என்றும், இந்த காணி துண்டுகள் தொடர்பில் காணி வரி அறவிட்டு வழங்கினால் பிரதேச சபைக்கு வருமானம் ஈட்டு முடியும் என்றும், இவர்களை அப்புறப்படுத்துவது இயலாத விடயம் என்பதால் ஏதேனும் முடிவு எட்டப்படும் வரை வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தி எங்கள் பகுதியை ஒதுக்கிக் கொண்டு ஏதேனும் வியாபார நடவடிக்கை ஒன்று மேற்கொள்வது உகந்தது என்று கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த காணியை மயானபூமி ஒன்று என்ற ரீதியில் கையகப்படுத்தப்பட்டு உள்ளது என்றும், வேறு ஒரு விடயத்திற்கு பயன்படுத்துவதாயின் உள்ளூராட்சிமன்ற அமைச்சரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்றும், 25 வருடங்கள் 30 வருடங்களுக்கு மேல் வசிக்கும் 08 வீடுகள் இங்கே காணப்படுகின்றன என்றும் அத்துமீறி அல்லது பல வருடங்கள் இவர்கள் இங்கு வசிக்கிறார்கள் என்றும், நாங்கள் பிரதேச சபை என்ற ரீதியில் எங்களின் அடிப்படை நோக்கம் பிரதேசத்தில் வாழும் மக்களின் நலன்கள், சுகாதாரம் போன்றவை தொடர்பாக நாங்கள் பொறுப்புக் கூற வேண்டும் என்றும், இவர்கள் அத்துமீறி வசிக்கும் நபர்கள் என்றாலும் அவர்களுக்கு அந்த வசதிகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும், இதுவரை இந்த காணியில் இருந்து எவ்விதமான வருமானமும் ஈட்டவில்லை என்றும், அத்துமீறிய வதிவிடதாரர்கள் என்ற கோணத்தில் பார்த்து இவர்களை அப்புறப்படுத்துவது உகந்தது அல்ல என்றும், இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கு முன் இவர்களை அப்புறப்படுத்தி இருந்தால் எவ்வித பிரச்சினையும் இல்லை என்றும், தற்போது இவர்கள் மாத்திரம் அன்றி பெல்மதுள்ள கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அத்தமீறிய கட்டுமானங்கள் காணப்படுகின்றன என்றும், இது தொடர்பாக மாற்று நடவடிக்கையாக இவர்களுக்கு வேறு காணிகள் வழங்க முடியும் என்றால் எவ்வித பிரச்சினையும் இல்லை என்றும், இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வது உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின், காணி அமைச்சரின் பரிந்தரைகள் பெற்றுக்கொண்டு இவர்களுக்கு உகந்த வித்தில் வரி ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தி பிரதேச சபைக்க வருமானம் பெறக்கூடிய விதத்தில் இவர்களுக்கு வழங்குவது உகந்த முறை ஆகும் என்றும், இன்று இதுவரை பெல்மதுள்ளையில் வருடக்கணக்காக அத்துமீறி கட்டுமானங்கள் மேற்கொண்டு அனுபவித்து வருகின்றனர் என்றும், மீண்டும் புதிதாக அத்துமீறிய கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படுமாயின் உடனடியாக அவற்றை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும், வருடக்கணக்காக இந்த அத்துமீறி கட்டுமானங்கள் இருக்குமாயின் அவற்றிற்கு ஒரே சமமாக ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி பிரதேச சபைக்க வருமானம் பெறக்கூடிய விதத்தில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும், தேவையான நேரத்தில் அபிவிருத்தி திட்டங்கள், நகர அபிவிருத்தி திட்டத்திற்கு ஏற்ப அத்துமீறிய கட்டுமானங்களை அகற்றுவதற்கு ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்வோம் என்றும், RD இன் மூலமும் அத்துமீறிய கட்டுமாங்கள் தொடர்பில் நட்டஈடு இல்லை என்று ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகிறது என்றும், அவர்கள் ஒரேயடியாக கட்டுமானங்களை உடைத்து அப்புறப்படுத்துவது இல்லை என்றும் தேவையான சந்தர்ப்பத்தில் கட்டாயமாக அவர்களே இடித்து அகற்றிக்கொள்ள வேண்டும் என்று ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டு உள்ளன என்றும், அந்த விதத்தில் நாங்களும் ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி பிரதேச சபைக்கு வருமானம் ஈட்டக்கூடிய விதத்தில் அவர்களுக்கு மனதில் சந்தேகங்கள் இல்லாமல் வாழ்வதற்கு முறை ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், கடந்த பொது சபைக் கூட்டத்தில் இது தொடர்பாக பிரேரணை முன்வைத்ததாகவும், ஆவணங்களில் இரன்ஜித் என்ற நபரின் பெயர் காணப்படவில்லை என்றும், அவர் இந்த பகுதியில் வசித்த ஒருவர் என்றும், மண்சரிவு ஏற்பட்ட போது பெகோ இயந்திம் பயன்படுத்திய போது அந்த வீடு இடிந்தது என்றும், இவர்களுக்கு சாதாரணம் ஒன்று செய்யுமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், திரு. சுனில் சோமரத்ன அவர்கள் தொடர்ச்சியாக தெரிவித்தது இந்த காணித் துண்டை அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும், முப்பது வருடங்களாக செய்யாத விடயத்தை நாங்கள் செய்கிறோம் என்றும், அதனால் அவர் தெளிவாக கருத்துக்களை முன்வைத்து உள்ளார் என்றும், வருடக் கணக்கில் வழங்காததை நிவர்த்தி செய்து வழங்குவதற்கு உள்ளது என்றும், 08 வருடங்களுக்கு முன் அத்துமீறி குடியிருக்கும் அக் காணிகள் அவர்களுக்கு இல்லாமல் போனால் அந்த காணியில் வேறு இடத்தில் பெற்றுக்கொடுப்பதற்கு உகந்த இடம் இருக்கமானால் அதை பெற்றுக்கொடுப்பதில் சிக்கல்கள் ஏற்படும் என்றும், ஏனென்றால் வேறு ஒருவர் எனக்கு இந்த இடத்தில் ஒரு காணித்துண்டு இருந்தது என்று கூறினால் அவருக்கும் எங்களுக்கு காணித்துண்டு ஒன்று வழங்கவதற்கு வேண்டி ஏற்படும் என்றும், இதற்கு நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றும், இந்த அனைவரும் அத்துமீறி குடியிருப்பவர்கள் அவர்களுக்கு காணி வழங்கும் போது சரியான புரிந்துனர்வு பெற்றுக்கொண்டு காணிகள் வழங்கப்பட வேண்டும் என்றும், மீகஹகொடவில் அத்துமீறி குடியிருப்பவர்கள் சிலர் இருக்கின்றார்கள் என்றும், அவர்களுக்கும் காணி வழங்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.பீ. சாந்த குமார குடாவத்த அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இவர்களுக்கு இதற்கு முன் காணிகள் வழங்கப்பட்டு உள்ளன என்றும், ஆனால் அவர்கள் அந்த இடத்தில் அத்துமீறி குடியிருக்கின்றார்கள் என்பது யதார்தமான உண்மை என்றும், பல வருடங்கள் அந்த இடத்தில் வசிப்பதால் தான் அவர்களுக்கு அந்த காணிகளை வழங்குமாறு நாங்கள் கோருவதாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த விடயம் அமைச்சர் வரை முன்வைக்கப்பட வேண்டும் என்றும், வீடு வழங்கும் திட்டங்கள் பல நடைபெற்று இருந்தாலும், பொதுக் காணிகளை பாதுகாப்பது இல்லை என்றும், வார சந்தை காணிக்கும் இதே நிலை ஏற்பட்டு உள்ளது என்றும், கௌரவ தலைவர் பிரத்தியோகமாக இந்த காணி அளக்கும் போது கலந்துகொண்டார் என்றும், அந்த அளவீடுகள் சட்ட ரீதியாக அமைச்சருக்கு முன்வைத்து அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 02**

உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் CLG/AD/03/1/12 மற்றும் 2026.05.08 ஆம் திகதியுடைய கடிதத்திற்கு ஏற்ப கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் வசிக்கும் காணியின் அளவிற்கு ஏற்ப எல்லைகளை குறித்து அடையாளம் கண்டு தயாரிக்கப்படும் நிலஅளவை வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த காணி வரியின் கீழ் வதிவிட நோக்கத்திற்கு உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் அனுமதியின் கீழ் வழங்குவது உகந்தது என்றும், அந்த அனுமதியுடன் கையகப்படுத்தும் சரத்துக்களின் கீழ் கையகப்படுத்தப்பட்ட இந்த காணி, காணி வரியின் கீழ் விடுவிப்பதற்கு அனுமதி பெறப்பட்டு உள்ள பகுதி சரியான தரவுகளுடன் மீண்டும் காணி அமைச்சரின் அனுமதி பெறுவதற்கு முன்வைத்து தனித்தனி நபருக்கு குறிப்பிட்ட பகுதிக்கு காணி வரி அறவிடுவதற்கு அனுமதி பெற வேண்டும் என்றும், அந்த அனுமதி பெறப்பட்டதன் பின்னர் மாத்திரம் அந்த காணியில் ஒவ்வொரு வதிவிடதாரருக்கும் வருடாந்த வரி அடிப்படையில் காணி பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

| தொ. இல. | பெயர் | வசிக்கும் காலம் | காணி அளவு (பர்ச்சஸ்) |
|---|---|---|---|
| 1 | திரு. பீ.எம்.எம். ஹாலிர் | 27 வருடங்கள் | 13.8 |
| 2 | திரு. ஜெமால்தீன் ஹம்து முகம்மது காசீம் | 30 வருடங்கள் | 3.4 |
| 3 | திருமதி. சித்த ஜெமால்தீன் இறந்துள்ளார் என்பதால் அவரின் மகன் திரு. முகம்மது நிசார் அந்த வீட்டில் வசிக்கின்றார் | 27 வருடங்கள் | 1.4 |
| 4 | திரு. முகம்மது சுவேர் ரிஸ்விக் நிசார் (பரிசோதனை மேற்கொள்ளும் போது வீடு பூட்டப்பட்டு இருந்தது) | 28 வருடங்கள் | 6.8 |
| 5 | திருமதி. பலனியான்டி பேபி இராணி (பரிசோதனை மேற்கொள்ளும் போது வீடு பூட்டப்பட்டு இருந்தது) | 18 வருடங்கள் | 2.0 |
| 6 | திரு. முகம்மது தாஹீர் மன்சூர் | 25 வருடங்கள் | 11.5 |
| 7 | திரு. எஸ்.எம். நந்தசிறி | 30 வருடங்கள் | 12.6 |
| 8 | திரு. டப்.ஏ.பீ. ரோஹன குமார | 10 - 15 வருடங்கள் | 6.5 |

03. கல்லேபிட்ட தகனசாலை காணியில் பிரீமிக்ஸ் முற்றம் ஒன்றை நிர்மாணித்தல் - கல்லேபிட்ட தகனசாலை அமைந்துள்ள காணியை வழங்கும் போது நிபந்தனையாக அவ்விடத்தில் அடிப்படை நோக்கம் தவிர்ந்த வேறு விடயங்களுக்கு பயன்படுத்த தடை விதிக்கப்பட்டு உள்ளது என்பதால் பிரீமிக்ஸ் முற்றம் ஒன்றை நிர்மாணித்து செல்லும் போது இடையில் சட்டரீதியான தடைகள் ஏற்படும். திட்டம் தோல்வியில் முடிவதற்கு அதிக அளவிலான வாய்ப்பக்கள் இருப்பதால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறும் பொது நகர்புறங்களில் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புக்கள் தடையாக இருக்கும் என்ற கருத்து மேலேழுந்து இருப்பதால் பிரீமிக்ஸ் முற்றத்தை கல்லேபிட்ட தகனசாலை காணியில் நிர்மாணிப்பது அபாயகரமான விடயம் என்று தெரிய வருகிறது. அதனால் இந்த திட்டத்தை கெடேதென்ன கழிவு முகாமை நிலையம் அமைந்துள்ள காணியில் நிர்மாணிப்பது மிகவும் உகந்தது என்பதால் பொதுச் சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கல்லேபிட்ட தகனசாலை அமைந்துள்ள காணியை வழங்கும் போது நிபந்தனையாக அவ்விடத்தில் அடிப்படை நோக்கம் தவிர்ந்த வேறு விடயங்களுக்கு பயன்படுத்த தடை விதிக்கப்பட்டு உள்ளது என்று வழங்கி இருந்தாலும், அந்த பரம்பரையில் எவரேனும் தற்போது இருப்பாராயின் அவரிடம் அனுமதி பெற்றுக்கொள்ள முடியும் என்றால் அந்த திட்டத்தை அந்த இடத்தில் மேற்கொள்ள முடியும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இது தொடர்ச்சியாக ஆலோசிக்கப்பட்டு வந்தது என்றும், உத்தியோகத்தர்கள் ஒன்று கூறுகின்றனர் என்றும், பூமியின் பெருமதி தொடர்பில் இன்னும் ஒன்று கூறுகின்றனர் என்றும், அப்படி கூறும் அனைத்து விடயங்களும் கமிட்டியில் கலந்தாலோசிக்கப்பட்டு இறுதி முடிவு ஒன்று எட்டப்பட்டு உள்ளது என்றும், இந்த விடயம் தொடர்பாக நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது என்றும், இது தொடர்ச்சியாக இழுபறி நிலை காணப்பட்டால் எந்த நிலையிலாவது தொடங்குவதற்கு முடியாது போகும் என்றும், இறுதியாக பொது சபைக்கு முன்வைத்து முடிவு எடுப்பதற்கு முன்வைக்க வேண்டும் என்றும், வாதவிவாதங்கள் செய்து பலன் இல்லை என்றும் இந்த திட்டத்தை விரைவாக செய்ய வேண்டும் என்றும், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், மயானபூமி ஒன்றிற்காக ஒதுக்கப்பட்டு இருந்தாலும் பின்னர் மயானபூமி ஒன்றாக பயன்படுத்தப்படாத காணி ஒன்றை காணி அமைச்சரின் ஒப்புதல் இல்லாமல் விற்பனை செய்தல், அடையாளம் இடுதல் அல்லது வேறு ஏதெனும் விடயங்கள் மேற்கொள்ளல் தடைசெய்யப்பட்டு உள்ளன என்றும், மயானபூமி கட்டளைச் சட்டத்தின் கீழ் அவை வேறு விடயங்களுக்கு பயன்படுத்துவது சட்டப்படி குற்றம் என்பதால் பின்னர் நிதியை பயன்படுத்தி மேற்கொண்டதன் பின்னர் இடிக்க கூறினால் அது சிக்கலான நிலமை என்பதால் கழிவு முகாமை நிலையத்தில் இந்த அபிவிருத்தி பணியை மேற்கொள்வது உகந்தது என்று கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 03**

பெல்மதுள்ள பிரதேச சபையின் பிரிமிக்ஸ் முற்றம் நிர்மாணிக்கும் திட்டம் கெடேதென்ன கழிவு முகாமை நிலையம் அமைந்துள்ள காணியில் நிர்மாணிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

மு.ப. 11.25 இற்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.எ. ருவன் சானக பியரத்ன அவர்கள் கௌரவ சபையில் இருந்து வெளியேறினார்.

04. இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, பனாவென்ன பயிற்சி நிலையத்தில் தொழிநுட்ப (NVQ 4) கணனி கற்கைநெறியை முடித்துள்ள கொடகம, பாதகட விலாசத்தில் வசிக்கும் செல்வி. பீ.டி.ரீ.கே. லக்ஷானி என்பவருக்கு எமது நிறுவனத்தில் 06 மாத காலத்திற்கு கணனி துறையில் மேலதிக பயிற்சி சந்தர்ப்பம் ஒன்றை பெற்றுக்கொடுப்பதற்கு கோரப்பட்ட விண்ணப்பம் மற்றும் அரச நிர்வாக சுற்றறிக்கை 04/2017(ii) இன் பிரகாரம் நாள் ஒன்றுக்கு ரூ. 1,000.00 தொகை வழங்கவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 4**

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, பனாவென்ன பயிற்சி நிலையத்தில் தொழிநுட்க (NVQ 4) கணனி கற்கைநெறியை முடித்துள்ள கொடகம, பாதகட விலாசத்தில் வசிக்கும் செல்வி. பீ.டி.ரீ.கே. லக்ஷானி என்பவருக்கு எமது நிறுவனத்தில் 06 மாத காலத்திற்கு கணனி துறையில் மேலதிக பயிற்சி சந்தர்ப்பம் ஒன்றை பெற்றுக்கொடுப்பதற்கு கோரப்பட்ட விண்ணப்பம் ஆராய்ந்து பார்த்து அவருக்கு மேலதிக பயிற்சிக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கும், அரச நிர்வாக சுற்றறிக்கை 04/2017(ii) இன் பிரகாரம் நாள் ஒன்றுக்கு ரூ. 1,000.00 தொகை வழங்கவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

05. 2025.05.13 ஆம் திகதி முடிவுகள் இலக்கம் 02 இன் பிரகாரம் பதியப்பட்ட வழங்கட்காரர்களின் ஆவணத்தை திருத்துதல் - சேவை அவசியம் காரணமான வாகனங்கள் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கு புதிய வழங்கட்காரரான டப்.பீ. மோட்டர் நிறுவனத்தின் திரு. டப். பேமசிறி அவர்களை பதிந்து வழங்கட்காரர்களின் ஆவணத்தை திருத்துவதற்கு அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 5**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கட்காரர்கள் பதியப்பட்டுள்ள வழங்கட்காரர்கள் பட்டியல் அனுமதி வழங்குவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

| தொ. இல. | பதிவு இல | நிறுவனத்தின் பெயர் முகவரி | பதியப்படும் விடயம் இலக்கம் மற்றும் விபரங்கள் | தொ.இல. |
|---|---|---|---|---|
| 01 | 1.1 | இரங்க லேத் இஞ்சினியரிங், 238/1, இரத்தினபுரி வீதி, பெல்மதுள்ள | 01. திறக்டர் வண்டிகள் பெகோ இயந்திரங்கள் உட்பட மோட்டார் வாகனங்களின் அனைத்து விதமான பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் (டீசல் பெட்ரோல் வாகனங்கள்) – லேத் வேலைகள், வேல்டின் வேலைகள் | 071-7199115<br>075-2493856 |
| 02 | 1.2 | எல்.பி.டி.கே.என்.டி. சில்வா சகோதரர்கள் மோட்டர்ஸ், தென்ன, ஹல்லின்ன, ஓபநாயக்க | 01. திறக்டர் வண்டிகள் பெகோ இயந்திரங்கள் உட்பட மோட்டார் வாகனங்களின் அனைத்து விதமான பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் (டீசல் பெட்ரோல் வாகனங்கள்) | 045-3451031<br>074-0732064<br>071-5911480 |
| 03 | 1.3 | காமிணீ டீசல் மோட்டர்ஸ், அயி.ஜி.ஜே. வீரசிறி, இறக்குவானை வீதி, கொடம, பெல்மதுள்ள | 01. திறக்டர் வண்டிகள் பெகோ இயந்திரங்கள் உட்பட மோட்டார் வாகனங்களின் அனைத்து விதமான பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் (டீசல் பெட்ரோல் வாகனங்கள்) | 045-2275025 |
| 04 | 1.4 | டப்.பீ. மோட்டர்ஸ், திப்பிட்டிகல, லெல்லொபிட்டிய | 01. திறக்டர் வண்டிகள் பெகோ இயந்திரங்கள் உட்பட மோட்டார் வாகனங்களின் அனைத்து விதமான பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் (டீசல் பெட்ரோல் வாகனங்கள்) | 076-7002641 |
| 05 | 2.1 | ஈ.ஏ. சதுர நாலக இம்புல்தென்ன, ஹுனுவல வடக்கு, ஓப்பநாயக்க | 02. அனைத்து வகையான மரங்கள் வெட்டுதல் | 077-0851440<br>071-1960920 |
| 06 | 2.2 | கே. விமல் உதயகுமார, 81 1/2 , கட்டங்கே வீதி, கஹவத்தை | 02. அனைத்து வகையான மரங்கள் வெட்டுதல் | 076-2475224 |
| 07 | 2.3 | எஸ்.ஆர்.எஸ். குமார, தெனவக வத்த, பெல்மதுள்ள | 02. அனைத்து வகையான மரங்கள் வெட்டுதல் | 071-6465354 |
| 08 | 2.4 | எச்.ஜீ. சுஜித் நில்மிணி விஜேசிங்க, சமகி மாவத்த, தலகஹவத்த, லெல்லொபிட்டிய | 02. அனைத்து வகையான மரங்கள் வெட்டுதல் | 071-3663322 |
| 09 | 2.5 | ஆர்.எம்.சீ. தில்ஹானி , 368/B, ரில்ஹேன, பெல்மதுள்ள | 02. அனைத்து வகையான மரங்கள் வெட்டுதல் | 076-3185591<br>070-9472496 |
| 10 | 2.6 | யு.எச். செனரத், இல.10 பிரிவு, சமனலகம, பாதகட, பெல்மதுள்ள | 02. அனைத்து வகையான மரங்கள் வெட்டுதல் | 071-1069214 |

06. ஆளுநர் செயலாளர் அவர்களின் இலக்கம் GS/ES/06/14 (1) கோவை மற்றும் 2025.01.15 ஆம் திகதியுமுடைய கடிதத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ள விதத்தில் பிரதேச சபையின் கழிவு முகாமை நடவடிக்கைகளுக்காக சேவை அவசியத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியம் கொள்வனவு செய்தல் முறையின் கீழ் 03 மாதங்களுக்கு ஒரு முறை சேவை நிறுத்தம் ஏற்படும் விதத்தில் 04 சுகாதார தொழிலாளர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டு உள்ளனர் என்றும், அவர்களுள் 02 தொழிலாளர்கள் தற்போது சேவைக்கு சமூகமளிப்பது இல்லை என்பதால் அதற்காக இதிகெடிய, பெல்மதுள்ள விலாசத்தில் வசிக்கும் சமிந்த குமார என்பவரை சேவைக்கு அமர்த்துவது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், சுகாதார தொழிலாளர்கள், சாரதிகள், வீதி தொழிலாளர்கள் சேவைக்கு வாராததற்கு காரணம் இவர்கள் தொடர்பாக சமூகத்தில் காணப்படும் மனப்பான்மை ஆகும். இவர்கள் பாரிய அளவிலான சேவையை செய்கிறார்கள் என்றும், இவர்களை கண்டால் ஒரு விதமான வெறுப்பு சமூகத்தில் காணப்படுகின்றது என்றும், இதனால் சமூகத்தில் மாற்றம் தேவை என்றும், இந்த சேவையை கௌரவமான சேவை ஒன்றாக உயர்த்தி அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கி உகந்த சீறுடைகள் வழங்கி உரிய கௌரவத்தை வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை பிரதேச சபையின் ஊடாக ஆரம்பிக்க வேண்டும் என்று கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 06**

சபையின் கழிவு முகாமை நடவடிக்கைகளுக்காக சேவை அவசியத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியம் கொள்வனவு செய்தல் முறையின் கீழ் 03 மாதங்களுக்கு ஒரு முறை சேவை நிறுத்தம் ஏற்படும் விதத்தில் சுகாதார தொழிலாளியாக இதிகெடிய, பெல்மதுள்ள விலாசத்தில் வசிக்கும் சமிந்த குமார என்பவரை சேவைக்கு அமர்த்துவது உகந்தது ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

**ii. கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்களின் பிரேரணைகள்**

07. மழை நாட்களில் கொஸ்வத்த புலத்வெல்கொட உட்பட கிராமங்கள் வெள்ள நிலமைக்கு தொடர்ச்சியாக மூழ்கும் அபாய நிலை ஏற்படுவதால் மக்களின் வாழ்க்கை நிலைக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டு உள்ளன. அதனால் இதற்கு காரணமான விடயங்கள் ஆராய்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், சமீப நாட்களில் மழை நாட்களில் புலத்வெல்கொட, கொஸ்வத்த, குறுதொல என்ற கிராமங்கள் சிறு மழைக்கும் மூழ்கும் நிலை காணப்படுகிறது என்றும், அங்கு 150 குடும்பங்கள் வரை அடிக்கடி பாதிப்புக்களுக்கு உள்ளாகிறார்கள் என்றும், இதற்கு காரணமாக இருப்பது கடந்த காலங்களில் பெய்த கடும் மழையுடன் மரங்கள் முறிந்து விழுந்தமை ஆகும் என்றும், இலை சறுகுகள் அடைபட்டமை, மரக் குற்றிகள் போன்றன கங்கந்த பாலம் மற்றும் அதற்கு அருகில் ஆற்றங்கரைகளில் தங்கி இருத்தல் ஆகும். இதனால் நீர் ஓட்டத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டு உள்ளன என்றும், மேலும் மண் நிரப்புதல் போன்ற காரணங்களும் காரணிகளாக அமைந்துள்ளன. சமீப நாட்களில் சிறு மழைக்கும் மூழ்கும் அபாயம் காணப்படுகின்றது என்றும், இதனால் மக்கள் மிகவும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர் என்றும், இது தொடர்பாக பிரதேச செயலகத்தில் இடர் முகாமை பிரிவிடம் வினவிய போது நீர்பாசனத் திணைக்களத்துடன் ஆலோசித்து தீர்வு ஒன்று எடுப்பதாக கூறியதாகவும், இது தொடர்பாக விரைவாக நடவடிக்கை ஒன்று எடுக்க வேண்டும் கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 07**

இந்த பிரேரணை பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டத்திற்கு முன்வைப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

08. பஹல போபிட்டிய உடகந்த வத்த வீதியின் ஒரு பகுதி இடிந்து விழும் அபாத்திற்கு உட்பட்டு உள்ளது. அந்த பகுதிக்கு பக்க மதில் சுவர் ஒன்றை நிர்மாணித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 08**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் கள ஆய்வு மேற்கொண்டு உரிய நிறுவனங்களுக்கு அறிவிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

09. குட்டபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் தெப்பகுளம் அருகில் உள்ள பாலத்தின் பக்க தடுப்புக்கள் உடைந்து அபாயகரமான நிலமை ஏற்பட்டு உள்ளது இதனால் இப் பாலத்தின் பக்க சுவர்களை நிர்மாணித்து தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், பாலத்தின் பக்க தடுப்புக்கள் மிகவும் பழுதடைந்து காணப்படுகின்றன என்றும், ஒரு பெரிய கிராமத்திற்கு செல்லும் பாதை என்பதால், இவர்களின் வாழ்வாதாரம் தேயிலை பயிர்ச்செய்கை என்பதால் அதிகளவிலான வாகனங்கள் பயணம் செய்கின்றன என்றும், இந்த அபிவிருத்திப் பணியை பிரதேச சபைக்கு செய்ய முடியாவிட்டால் மாகாண சபைக்காவது முன்வைக்குமாறும், இது விபத்துக்கள் அதிகம் ஏற்படும் ஒரு இடம் என்றும், இதை அபிவிருத்தி செய்து தருமாறு கிராம வாசிகள் கோரிக்கை முன்வைத்து உள்ளனர் என்றும், பாலத்தின் பக்க தடுப்புக்கள் இரண்டையும் மிக விரைவாக நிர்மாணித்து தருமாறு கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த பிரேரணை மாகாண சபைக்கு முன்வைக்கப்பட்டு உள்ளது என்றும், வருங்காலத்தில் இந்த அபிவிருத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், திட்டமிடப்பட்டதற்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் இந்த அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு அதிக கால தாமதம் ஏற்படும் என்றும், கடந்த வருடத்தில் அபிவிருத்தி பணிகளுக்காக ரூ. 200,000.00 தொகை ஒதுக்கப்பட் போதிலும் அதை பெற்றுக்கொள்ள முடியாமல் போனது என்றும், இந்த வருடத்திலாவது அந்த நிதி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும், திட்டமிடப்பட்டதற்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ள இருந்தால் அது வெறிறிகரமாக இருக்கும் என்பதில் நம்பிக்கை இல்லை என்றும், இந்த பணி மிகவும் கால தாமதம் ஆகும் என்றால் அத்தியவசிய விடயங்கள் காலம் தாழ்த்தி போடுவது உகந்தது இல்லை என்று கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த பிரேரணை திட்டமிடப்பட்டதற்கு ஏற்ப அல்லாமல் மாகாண சபைக்கு முன்வைத்து உள்ளது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், வெள்ள அபாய நிலை பற்றி கலந்தாலோசிக்கும் போது புலத்வெல்கொட மட்டும் இல்லாமல் பெல்மதுள்ள பிரதேசம் பொரும் அளவில் வெள்ள அபாய நிலைக்கு உட்படுகின்றது என்றும், கெடேதென்ன, பனாவென்ன பகுதிகள் வெள்ளத்திற்கு மூழ்குகின்றன என்றும், இது தொடர்பாக பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டத்தில் இடர்களை குறைத்துக்கொள்வதற்கு திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு பிரேரிக்கப்பட்டது என்றும், போபெத்தவில் இருந்து தெனவக ஆற்றில் நீர் வடிந்து செல்வது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என்றும், நகரத்தின் பின்புறம் உள்ள வடிகால்கள் பிரவேச வீதி வரை நீட்டுவதற்கு வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டும் என்றும், பனாவென்ன நீரோடை அகலமாக்க வேண்டும் என்றும், அப்போது பனாவென்ன பகுதியை வெள்ள அபாயத்தில் இருந்து குறைத்துக்கொள்ள முடியும், கெடேதென்ன பகுதிகள் வெள்ளத்திற்கு மூழ்குகின்றன என்றும், இவற்றிற்கு தற்போதிருந்து திட்டங்கள் தயாரித்து செயல்படுத்தாவிட்டால் வெள்ள அபாய நிலைக்கு உட்படும் என்றும், தற்காலிக பிளாஸ்டர் அல்லாமல் இடர் முகாமை திட்டம் ஒன்றை பிரதேச சபை பிரேரித்து, திட்டம் தயாரித்து செயல்படுத்த வேண்டும் என்றும் இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்திற்கு முன்வைக்குமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த வெள்ள பெருக்கு நிலை இன்று நேற்று ஏற்பட்டது அல்ல என்றும், இடர் முகாமை திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டும் என்றும், தேவேயான இடங்களுக்கு மதகுகள் இடுவதற்கும், மதகுகளின் வாய்களை அகலம் ஆக்குவதற்கும், மீள் நிர்மாணங்கள் மேற்கொள்ளும் போது உரிய மேற்பார்வையின் கீழ் வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும் என்றும், அரசு என்ற ரீதியில் களுகங்கை சார்ந்து வெள்ள கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது என்றும், அது தொடர்பாக அவதானம் செலுத்தப்படும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இது தொடர்பாக பல விடயங்கள் எழுந்ததன் காரணமான செயலாளருடன் ஆலோசித்து பிரதேச சபையின் தொழிலாளர்களை பயன்படுத்தி ஆற்றின் இரு புறங்களையும் துப்புறவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்த போதிலும் அங்கு காணப்பட்ட அபாயகரமான நிலை காரணமான மற்றும் விடயங்களுக்கு புறம்பான செயல்கள் காரணமாகவும் அதை செயல்படுத்தவில்லை என்றும், ஆற்றுக்கு இடைஞ்சல் ஏற்படும் விதத்தில் ஆற்றின் இரு புறங்களிலும் கட்டுமாணங்கள் உள்ளன என்றும், புலத்வெல்கொட பிரதேசத்திற்கு வடக்குத் திசையில் பெரிய வயல்வெளி ஒன்று காணப்படுகின்றது இந்த வயல்வெளி நீரில் மூழ்கிய பின்னர் பாரிய அளவிலான நீர் ஒன்று சேர்கிறது என்றும், இந்த ஆற்றின் இரு புறங்களிலும் மரக்குற்றிகள் பொன்றவை அடைபட்டு மற்றும் கட்டுமாணங்கள் காரணமாக ஆறு தடைபடுகிறது என்றும், இந்த பிரேரணையை பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டத்திற்கு முக்வைப்பதாக கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 09**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் கள ஆய்வு மேற்கொண்டு உரிய நிறுவனங்களுக்கு அறிவிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**iii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.டப். மொஹான் மஞ்சுல அவர்களின் பிரேரணைகள**

10. பெல்வாடியவில் இருந்து கல்லின்ன வரையிலான வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் அந்த வீதியை புனர்நிர்மாணம் செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கல்லின்ன கிராமத்திற்கு செல்லும் பிரதான வீதி அதிக அளவில் பழுதடைந்து காணப்படுகின்றது என்றும், பாடசாலை மாணவர்கள் பயணம் செய்யும் வாகனங்கள், தினந்தோரும் கிரமாத்திற்கு வரும் வாகனங்கள் அதிக

அளவில் இந்த வீதியை பயன்படுத்துகின்றன என்றும், இது தற்போது போக்குவதர்திற்கு பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது என்றும், இதனால் விரைவாக இந்த வீதியை புணரமைத்து தருமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப். மொஹான் மஞ்சுல அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 10**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி மூலம் மேற்கொள்ள முடியுமான அபிவிருத்தி பணியாயின் செயற்படுத்துவதற்கும், அதுபொல் செய்ய முடியாது என்றால் உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

11. கொரககஹ சந்தியில் இருந்து திரு. நந்ததிஸ்ச என்பவரின் வீடு வரையிலான வீதியை கொங்கிறீட் இடுவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 11**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி மூலம் மேற்கொள்ள முடியுமான அபிவிருத்தி பணியாயின் செயற்படுத்துவதற்கும், அதுபொல் செய்ய முடியாது என்றால் உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

12. பதுல்பான சுமித் ஹோட்டலுக்கு அருகில் செல்லும் வீதியில் மதகு ஒன்று இட்டு புனர்நிர்மாணம் செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 12**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி மூலம் மேற்கொள்ள முடியுமான அபிவிருத்தி பணியாயின் செயற்படுத்துவதற்கும், அதுபொல் செய்ய முடியாது என்றால் உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

13. பெல்வாடிய கனேகம திரு. அதுகோரல என்பவரின் வீடு வரையிலான வீதியை கொங்கிறீட் இடுவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 13**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி மூலம் மேற்கொள்ள முடியுமான அபிவிருத்தி பணியாயின் செயற்படுத்துவதற்கும், அதுபொல் செய்ய முடியாது என்றால் உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

14. பெல்வாடிய பேருகெடிய வீதியில் பக்க மதில் சுவர் ஒன்றை நிர்மாணிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 14**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி மூலம் மேற்கொள்ள முடியுமான அபிவிருத்தி பணியாயின் செயற்படுத்துவதற்கும், அதுபொல் செய்ய முடியாது என்றால் உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

15. பொல்கஹதென்ன திரு. சதுரங்க என்பவரின் வீட்டு வீதியை பெகோ இயந்திரம் பயன்படுத்தி செப்பனிடுவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 15**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**iv. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. வெரஞ்சனா காமினீ விஜேரத்தின அவர்களின் பிரேரணைகள்**

16. சர்வோதய மாவத்தையில் இருந்து சமகி மாவத்தை வரை இருக்கும் 08 அடிகள் கொண்ட 150 மீற்றர் நீளமான வீதியில் 10 வீடுகள் வரை உள்ளன. இந்த வீதியை அதிக அளவிலான மக்கள் பயன்படுத்துவதால் இவ்வீதி மிகவும் பழுதடைந்து காணப்படுகிறது. இதற்கு முன் பல முறை கோரிக்கை விடுத்த போதும் அவற்றிற்கு எவ்விதமான பதில்களும் கிடைக்கவில்லை. இதனால் இந்த வீதியை கொங்கிறீட் இட்டு செப்பனிடுவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோதரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கிராம உத்தியோகத்தர் பிரிவில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தி திட்ட பிரேரணைகள் VDP ஊடாக முன்னுரிமை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் என்றும், அதன் ஊடான பணிகள் மேற்கொள்ளும் போது கால தாமதங்கள் ஏற்படுகின்றன என்றும், வீடுகள் அதிகமாக உள்ள வீதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகின்றன என்றும், இந்த பிரேரணைகள் வருங்காலத்தில் மேற்கொள்ள முடியும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ரீ.கே. சம்பத் சிறிசாந்த அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த வீதியின் பெயர் லஹிரு மாவத்தை என்றும், பஹல போபிட்டியவின் எல்லையில் உள்ளது என்றும், இது பஹல போபிட்டிய ஊடாக சர்வோதயவிற்கு செல்லும் குறுகிய வீதி ஆகும் என்றும், இந்த வீதி லஹிறு இளைஞர் மன்றத்தினால் சிரமதானப் பணி மூலம் செப்பணிடப்பட்ட வீதி என்றும், இந்த பிரேரணையானது மிகவும் நல்ல ஒரு பிரேரணை என்றும், பிரதேச சபையின் பெகோ இயந்திரத்தையாவது பயன்படுத்தி சிறு கற்களை பாவியாவது தற்போதைக்கு பயன்படுத்தக்கூடிய விதத்தில் திருத்தித் தர முடியும் என்றால் அது ஒரு நல்ல விடயம் என்று கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 16**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பொகோ இயந்திரத்தை பயன்படுத்தி இந்த வீதியை செப்பணிடுவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**v. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களின் பிரேரணைகள்**

17. 2026.05.13 ஆம் திகதி முடிவுகள் இலக்கம் 09 இற்கு ஏற்ப சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் கமிட்டி ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் இலக்கம் 04 இன் பிரகாரம்,

பெல்மதுள்ள பிரதேச சபையில் கடமை புரியும் ஜே.என்.ஜீ. இலக்மிண, டப். சுமித் ஆகிய இருவரின் சேவை ஒப்பந்த காலத்தை ஒரு மாதத்திற்கு நீடித்து அந்த கால எல்லையினுள் மேற்பார்வை செய்து அதன் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு வருங்காலத்தில் சேவை ஒப்பந்த காலத்தை நீடிப்பதா இல்லையா என்று முடிவு எடுப்பதற்கும், ஏ. உதய குமார, ஆர். உதய குமார ஆகிய இருவரின் வரவு ஒழுங்காக இல்லாததன் காரணத்தினால் அவர்கள் பணியில் இருந்து விலகி சென்றுள்ளனர் என்று கருதி அந்த பதவிகளுக்கு தருதியுடைய வேறு இருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு கமிட்டி உறுப்பினர்களின் பரிந்துரை கிடைக்கப்பெற்று உள்ளது. இது தொடர்பாக உகந்த முடிவு ஒன்றை எடுப்பதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த பிரேரணை தனிப்பட்ட பிரேரணை ஒன்று அல்ல என்றும், 2026.05.13 ஆம் திகதி முடிவுகள் இலக்கம் 09 இற்கு ஏற்ப சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் கமிட்டி ஊடாக வழங்கப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றியதாகவும், சுகாதார ஊழியர்களின் சேவை காலத்தை நீடிப்பது தொடர்பான பல பரிந்துரைகள் கமிட்டியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு உள்ளதாகவும் அந்த அறிக்கையை வாசிக்குமாறு கௌரவ சபையிடம் கோருவதாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 17**

பெல்மதுள்ள பிரதேச சபையில் கடமை புரியும் ஜே.என்.ஜீ. இலக்மிண, டப். சுமித் ஆகிய இருவரின் சேவை ஒப்பந்த காலத்தை முன்று மாதத்திற்கு நீடிப்பதற்கும், சுகாதார ஊழியர் பதவிகள் 02 இற்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**vi. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களின் பிரேரணைகள்**

18. கல்அஸ்ஸாபொல, கந்தெஅரம்ப வீதியில் கடந்த காலங்களில் ஏற்பட்ட கடும் மழை காரணமாக வடிகால் தொகுதியில் விழுந்துள்ள மண்ணை அப்புறப்படுத்தி வடிகால் தொகுதியை திருத்துவதற்கு JCB இயந்திரத்தை பெற்றுத்தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். திசோக் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 18**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

19. புதுலென 30 ஏக்கர் வீதியில் சில இடங்களில் விழுந்துள்ள மண்ணை அகற்றி வடிகால் தொகுதியை திருத்துவதற்கு JCB இயந்திரத்தை பெற்றுத்தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். திசோக் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 19**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

20. புதுலென ஆரம்ப பாடசாலைக்கு பெயர் குறிப்பிட்டு பெயர் பலகை ஒன்று செய்து தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். திசோக் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 20**

இந்த பிரேரணை தொடர்பாக பிரதேச செயலகத்தின் ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி பிரிவிற்கு முன்வைப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

21. உடதழுவ கோயில் வீதியில் விழுந்துள்ள மண்ணை அகற்றி வடிகால் தொகுதியை திருத்துவதற்கு JCB இயந்திரத்தை பெற்றுத்தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். திசோக் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 21**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

22. 2025.12.10 ஆம் திகதி முடிவுகள் இலக்கம் 20 இன் கீழ் எடுக்கப்பட்ட கீழ் குறிப்படப்பட்டுள்ள பிரேரணை மற்றம் முடிவு

அனுமதிப்பத்திரதாரர் திருமதி. டப்.பி.எம். ஹிருணி நவோத்யா பஸ்நாயக அவர்களுக்கு உரித்தான மாணிக்க கல் அகழ்வு சுரங்கம் காரணமாக கல்லெபிட தகனசாலை அமைந்துள்ள காணிக்கு தோண்டப்பட்டுள்ள சுரங்கத்தில் இருந்து பெறப்பட்ட மாணிக்க மண் தொடர்பாக வருங்கால நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உகந்த முடிவு ஒன்றை எடுப்பதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

முடிவுகள் இலக்கம் 20
இந்த காணியில் இருந்து கிடைத்த மாணிக்க கணிம வளங்கள் தொடர்பாக குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திற்கு புகார் ஒன்றை பதிவுசெய்து சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்றும், ஆரம்ப கட்ட நடவடிக்கையாக குற்றவியல் தொடர்பாக விவேட நிபுனத்துவம் உள்ள சட்டத்தரணி ஒருவருக்கு கோவையை சமர்பித்து வழக்கு நடவடிக்கைகள் தொடர்வதற்கு போதிய அளவிலான சாட்சிகள் உள்ளனவா என பரிசோதித்து பெறப்படும் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வருங்கால நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்ம முடிவிற்கு ஏற்ப இதுவரை எவ்விதமான முன்னேற்றமும் (06 மாதங்கள்) பெற்றுக் கொடுத்து இல்லை என்பதால் இது தொடர்பாக உகந்த முடிவு ஒன்றை எடுப்பதற்கு கௌரவ பொது சபைக்கு முன்வைக்கின்றேன். (2026.05.29 தொழிநுட்ப மற்றும் சேவைகள் கமிட்டி பரிந்தரைகள் இலக்கம் 06)

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசந்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு பொது சபையில் ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டு உள்ளது என்றும், ஆனால் வேலைப்பழு காரணமாக இந்த விடயம் தொடர்பாக தேடிப்பார்க்க முடியாமல் போனது என்றும், விரைவாக அடுத்த பொது சபை கூட்டத்திற்கு முன்னர் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முன்வைப்பதாக கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இது தொடர்பாக ஆய்வுக் கட்டணமாக ரூ. 200,000.00 தொகை செலவாகும் என்று புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகம் அறிவித்து உள்ளது என்றும், ஆய்வுக்கு செலவாகும் பில்லை முன்வைக்குமாறு தெரியப்படுத்தியதாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தினால் இந்த பணியை மேற்கொள்வதற்கு கால தாமதம் ஏற்படுவதால் பரிசோதனை குழிகள் சிலவற்றை தோண்டுமாறு தெரிவித்ததாகவும், இன்று இந்த இரண்டையும் பொது சபை அனுமதித்தது என்றும், பெகோ இயந்திரம் ஒன்றை பயன்படுத்தி விரைவாக செய்ய முடியாது என்றும், தகனசாலைக்கு பாதிப்பு ஏற்பட்டால் யார் பொறுப்பை ஏற்பது என்றும், இரத்திணக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் அனுமதியை பெற்று பரிசோதனை குழிகள் சிலவற்றை தோண்டுவதற்கான வழிமுறை உள்ளது என்றும், அந்த வழிமுறைக்கு செல்வதற்கு முயற்சிகள் எடுத்ததாகவும், இந்த இரண்டு விடயங்களும் நடைபெறாததால் மேலும் பிரதேச சபையின் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டு வருகிறகு என்றால் 100% உங்களுடன் இருப்பதாகவும், தற்போது பூமிக்கு சுரங்க பாதைகள் சென்று இல்லை என்று உத்தரவாதம் தருவதானால் அந்த உத்தரவாதத்தை ஏற்பதற்கு விருப்பமாக இருப்பதாகவும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், சென்ற சுரங்க பாதைகளுக்கு பரிசோதனை குழிகள் தோண்டி அளவீடுகள் மேற்கொண்டு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கும், தற்போது குழிகள் தோண்டப்பட்டன என்றும், ரூ. 80,000.00 தண்டப்பணம் விதித்ததாகவும், மீண்டும் மீண்டும் ஆய்வுகள் மேற்கொள்ள முடியும் என்றும், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், மயானபூமி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இரத்திணக் கற்கள் என்பது வேறான ஒரு எதிரெதிரான விடயம் என்றும், அமைச்சரின் அனுமதி பெறவேண்டும் என்றும், தற்போது இது தொடர்பாக ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுமாறு புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்திற்கு கடிதம் ஒன்று முன்வைத்தாகவும் கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 22**

இச்த பிரச்சினை தொடர்பாக விரைவாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முன்வைப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**vii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின அவர்களின் பிரேரணைகள்**

23. திப்பிட்டிகல வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள திரு. அஜித் என்பவரின் வீடுவரை உள்ள குறுக்கு வீதியில் 125 மீற்றர் அளவு கொங்கிறீட் இட்டு அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 23**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

24. திப்பிட்டிகல சனசமூக நிலையத்திற்கு அருகில் மேல் வீதியில் திரு. சுஜீவ என்பவரின் வீடுவரையிலான வீதியில் உடைந்து காணப்படும் பகுதியை அபிவிருத்தி செய்து தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 24**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சி நிரல் முன்வைத்ததன் பின்னர் உள்ளூராட்சிமன்ற உதவி ஆணையாளர் அலுவலகம் கல்லேபிட்டஹேன காணியில் அத்துமீறி வசிக்கும் நபர்கள் தொடர்பில் செயல்படுதல் என்ற தலைப்பில் அனுப்பியுள்ள கடிதம் தொடர்பாக முடிவு ஒன்று எடுப்பது முக்கியம் என்பதால் அவசர பிரேரணை ஒன்றாக பொது சபைக்கு முன்வைப்பதற்கு சபையின் இணக்கம் வினவப்பட்டது. பொது இணக்கத்துடன் அவசர பிரேரணை ஒன்றாக முன்வைப்பட்டது.

**அவசர பிரேரணைகள்**

**கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் பிரேரணைகள்**

கல்லேபிட்டஹேன காணியில் அத்துமீறி வசிக்கும் நபர்கள் தொடர்பில் செயல்படுதல் என்ற தலைப்பில் உள்ளூராட்சிமன்ற உதவி ஆணையாளரின் ACLG/06/01/04/03 இலக்கம் மற்றும் 2026.05.25 ஆம் திகதியுடைய கடிதத்திற்கு ஏற்ப கல்லேபிட்ட தகனசாலை காணியானது குறித்த விடயத்திற்கு தேவை இல்லை என்றால் மற்றும் உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு கையகப்படுத்தப்பட்டு இருப்பின், அத்துமீறி வசிக்கும் நபர்களுக்கு பகிர்ந்து அளிப்பது தொடர்பில் முறையான விதத்தில் பிரதேச செயலாளருக்கு மீண்டும் ஒப்படைப்பது உகந்தது என்று குறிப்பிடப்பட்டு இருக்கும் பரிந்துரைக்கு ஏற்ப ஆளுனரின் செயலாளரின் GS/ES/6/14/3(II) கோவை 7 மற்றும் 2026.03.17 ஆம் திகதியுமுடைய கடிதம் மூலம் பிரதான செயலாளருக்கு தெரியப்படுத்தி உள்ளது என்றும், இது தொடர்பாக உகந்த முடிவு ஒன்றை எடுப்பதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசந்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

பி.ப. 12.00 மணிக்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயந்தி சில்வா அவர்கள் கௌரவ சபையில் இருந்து வெளியேறினார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த அத்துமீறி வசிக்கும் நபர்கள் தொடர்பில் எடுக்க முடிந்த நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசணைகள் பெறுவதற்கு கடிதம் ஒன்று அனுப்பிதாகவும், ஆனால் அவர்கள் புரிந்துகொண்டு இருப்பது இந்த காணி அவசியம் அற்ற காணி ஒன்றாக என்றும், அவர்களுக்கு காணி வழங்குவது என்றால் பிரதேச செயலகத்திற்கு காணியை ஒப்படைக் வேண்டும் என்றும், அதன் பின்னர் அவர்கள் காணி கச்சேரி ஒன்றை நடாத்தி உரிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்வார்கள் என்றும், அதன் அடிப்படையில் அந்த கடிதத்திற்கு ஏற்ப கல்லேபிட்டஹேன தகனசாலை காணி குறித்த விடயத்திற்கு தேவை இல்லை என்றால் மற்றும் உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு கையகப்படுத்தப்பட்டு இருப்பின், அத்துமீறி வசிக்கும் நபர்களுக்கு பகிர்ந்து அளிப்பது தொடர்பில் முறையான விதத்தில் பிரதேச செயலாளருக்கு மீண்டும் ஒப்படைப்பது உகந்தது என்றும் ஆகும். பிழையான புரிதல் ஏற்பட்டு உள்ளது என்றும் எங்களுக்கு தேவை இந்த அத்துமீறி வசிக்கும் நபர்கள் தொடர்பில் எடுக்கவேண்டிய சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்பில் வழிகாட்டல்கள் பெற்றுத்தருமாறு கோரி உள்ளதாகவும், அவர்கள் முழு காணி தொடர்பில் இதுபோன்ற கடிதம் ஒன்று முன்வைத்து உள்ளனர் என்றும், இந்த பிரச்சினையை சரி செய்து மீண்டும் கடிதம் ஒன்று முன்வைப்பதாக கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 25**

இந்த காணியில் தகனசாலை அமைந்துள்ளதால் வேறு நிறுவனம் ஒன்றிற்கு பெற்றுக்கொடுப்பது தொடர்பில் எவ்வித உடன்பாடும் இல்லை என்றும், இந்த காணியில் ஒரு பகுதியில் வசிக்கும் அத்துமீறிய வதிவிடதாரர்கள் தொடர்பிர் பிரதேச சபை மூலம் குத்தகைக்கு விடுவதற்கு தேவையான ஆலோசனைகள் பெற்றுக் கொள்வதற்கு கடிதம் ஒன்று முன்வைப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், சம்பளம் போதிய அளவில் இல்லை என்று அனுபவத்தில் புரிந்துகொண்டு அறிக்கை விடுத்து தேவையானவர்களின் அவதானத்திற்கு முன்வைத்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு இதை விட கூடுதலான கொடுப்பனவு ஒன்று பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கடிதம் ஒன்று முன்வைக்கிறேன் என்ற கூற்றுக்கு பாராட்டுக்களை தெரிவிப்பதாகவும், முடியும் என்றால் எரிபொருள் கொடுப்பனவை மற்றும் பிரயாண கொடுப்பனவு போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்கு பொறிமுறை ஒன்றை செய்துதருமாறும், பிரதேச சபை உறுப்பினர்கள் என்ற ரீதியில் அரசியல் செய்யும் போது நாங்கள் பொதுமக்களுக்கு ஈடுபாட்டுடன் சேவை செய்யும்போது பெரிய பொருளாதார பலம் உள்ளவர்கள் அல்ல என்றும், அரசியல் செய்யும் போது நாங்கள் நேர்மையாகவும் மனதிற்கு இணங்கவும் ஈடுபடுவதற்கு தேவையான வசதிகள் செய்து தர வேண்டும் என்றும், பொது மக்களுக்கு சேவை செய்வதற்கு வசதிகள் தெவை என்றும், வசதிகள் தொடர்பில் குருட்டுக் கோணத்தில் பார்க்காமல் நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பொது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்றும், பிரதேச சபை உறுப்பினர்களின் குறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி இதுபோன்ற கோரிக்கைகள் முன்வைத்து உள்ளதாகவும், இதன் மூலம் அவதூறு ஏற்பட்டால் மனதிற்கு இணங்க இலங்கையில் உள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவர் சார்பிலும் அவதானத்திற்கு உட்படுத்தப்பட்டமை குறித்து பெறுமை அடைவதாகவும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இது தொடர்பாக உள்ளூராட்சி மன்ற அமைச்சருக்கு கோரிக்கை முன்வைப்பதற்கும், இந்த பிரயாணக் கொடுப்னவு பெற்றுக் கொள்வது தொடர்பில் சம்பள விடய உத்தியோகத்தர் திரு. உபநந்த அவர்களின் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், திரு. உபநந்த அவர்களின் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் என்றால் அது பெருமதியானது என்றும், சபையில் உறுப்பினர்கள் காத்திருப்பார்கள் என்ற நம்மிக்கை இல்லை என்றும், தற்போது சில உறுப்பினர்கள் இராஜினாமா செய்வதற்கு உத்தேசித்து உள்ளனர் என்றும், அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களும் சபையில் இருப்பதற்கு விருப்பமாக உள்ளதாக கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், கிராமத்தை நாட்டை அபிவிருத்தி செய்யும் பொருட்டு நாங்கள் இங்கே வந்தது வேறு பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொண்டு இருக்கும் போது என்றும், தேர்தலில் போட்டியிட்டு ஏதேனும் செய்வதற்கு என்ற எண்ணத்துடன் கதைப்பதாகவும், இது இந்த அரசாங்கத்தினால் இல்லாமல் செய்யப்பட்டது ஒன்று அல்ல என்றும் இதற்கு முன் இருந்து இருந்த ஒன்று என்றும், சட்டத்திற்கு முரணாக ஏதும் செய்ய முடியாது என்றும், சட்ட ரீதியான முறையில் பொருத்தப்பட்டு உள்ளது என்றும், கடந்த காலங்களைப் போல் ஒப்பந்தங்கள் ஏதும் இல்லை என்றும் அவை வெளிப்படைத் தண்மையில் நடைபெறுகின்றன என்றும், சிலருக்கு அவற்றின் மீது சார்ந்து இருக்க முடியாது போய் உள்ளது என்றும், இராஜினாமா செய்ய

பிரதேச சபை உறுப்பினர் கொடுப்பனவுகள் மீது அல்லாமல் தனிப்பட்ட வியாபார நடவடிக்கைகள் மற்றும் தொழில் போன்ற காரணங்களுக்காக இராஜினாமா செய்தார் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், கிராம சபை காலத்தைப் போலவே தற்போதும் இது ஒரு கௌரவமா சேவை என்றும், கௌரவமா சேவை செய்தாலும் கௌரவ சுசன்த உறுப்பினர் அவர்களே தற்போது ஒப்பந்தங்கள் இல்லை என்றும், இந்த விடயம் அனைவருக்கும் பொருந்துவது இல்லை என்றும், ஒப்பந்தங்கள் மூலம் பயன்பெற்றவர்கள் இருப்பார்கள் என்றும் புகார் என்ற ரீதியில் முழு சபை முன்னிலையிலும் கூறவேண்டியது இல்லை என்றும் மற்றும் நாங்கள் இங்கு வருகை தந்திருப்பது கௌரவமான சேவை செய்வதற்கு என்றும், தற்போது உறுப்பினர் ஒருவருக்கு கௌரவ என்று கூறும் நிலை எங்கே இருக்கிறது அன்று இருந்தது இல்லாமல் போய் விட்டது என்றும், இந்த கொடுப்பனவுகளை அதிகரித்து தருமாறு கூறுவது தமது குடும்பத்தை காப்பாற்றுவதற்கு அல்ல பொது மக்களுக்கு சேவை செய்வதற்கு என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், கௌரவ புஸ்பகுமார தனசேகர அவர்களுக்கு அவமரியாதை ஏற்படுவதால் இந்த கருத்தை தெரிவிப்பதாகவும், இராஜினாமா செய்தது பண காரணமாக அல்ல என்றும், அவர் ஒரு பொறியியலாளர் உன்றும், அவருடைய சேவை இந்த இடத்தில் வைத்திருப்பது நியாயம் அற்றது என்றும், அவர் வேறு விடயம் ஒன்றிற்கு தயாராகி இருந்ததன் காரணமாக இராஜினாமா செயதார் என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**07. செயற்பாட்டுக் குழுக்களின் அறிக்கைகள் முன்வைத்தல்கள் -**

2026.05.05 ஆம் திகதி நடைபெற்ற இடர் முகாமை செயற்பாட்டுக் கமிட்டியின் கூட்ட அறிக்கை மற்றும் 2026.05.20 ஆம் திகதி நடைபெற்ற சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் கமிட்டியின் அறிக்கை மற்றும் 2026.05.22 மற்றும் 2026.05.20 ஆம் திகதி நடைபெற்ற தொழிநுட்ப சேவைகள் கமிட்டிகளின் அறிக்கைகள் சபைக்கு முன்வைக்கப்பட்டன.

கருத்து தெரிவிக்கையில், இடர் முகாமை செயற்பாட்டுக் கமிட்டிக்கு ஆக்க குறைந்தது உங்கள் பிரதேசத்தில் இருந்து தகுதியான நபர் ஒருவரை தொடர்புபடுத்தித் தருமாறு கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், பொது சபைக்கு பிரேரணை ஒன்று பிரேரிக்கப்பட்டது தெரிவிக்கப்பட்டது என்னவென்றால் கிராம மட்டங்களில் கழிவு முகாமை தொடர்பாக பொது மக்களை தெளிவுபடுத்துவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தருமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்ததாகவும், இதுவரை இந்த விடயம் தொடர்பாக எவரினதும் உதவி கிடைக்கவில்லை என்றும், பொது மக்களை தெளிவுபடுத்தாமல் கழிவு முகாமை நடவடிக்கைகள் மேற்கொள்வது இயலாத காரியம் என்றும், இந்த விடயத்திற்கு உதவுமாறு மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொள்வதாகவும், இது அனைவரினதும் பிரதேச சபை என்றும், இந்த கழிவு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நாங்கள் எல்லோரும் ஒன்று சேர வேண்டும் என்றும், இதற்காக பொது மக்களை ஒரு இடத்திற்கு ஒன்று சேர்த்து கழிவு முகாமை தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு உதவிகளை பெற்றுத்தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்வதாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த கமிட்டிகளில் பிரச்சினைகள் ஆலோசிக்கப்பட்டது மட்டுமே நடந்தது அவை நடைமுறைபடுத்தப்படுகின்றன என்று காண்பதற்கு இல்லை என்றும் இவற்றை செய்யவில்லை என்று கூறி கமிட்டிகளுக்கு குறைகள் தெரிவிக்கப்படுகின்றன என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், விசேடமாக ஆளும்கட்சி எதிர்கட்சி பேதம் இன்றி கமிட்டிகள் நடைபெறுகின்றன என்றும், அதிகமான எதிர்கட்சி உறுப்பினர்கள் வருகை தருவது குறைவு என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த கமிட்டிகளில் எடுக்கப்படும் முடிவுகளில் பிரச்சினைகள் காணப்படுகின்றன என்றும், வீதி மின் விளக்குகள் தொடர்பாக பொதுமக்கள் அபிவிருத்தி கமிட்டியில் தகவல்கள் திரட்டுமாறு கோரப்பட்டு உள்ளது என்றும், அதில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்றும், கிராமத்திற்கு உரிய உறுப்பினர் ஒருவர் இருப்பதால் அவரிடம் இது தொடர்பாக கருத்துக்கள் பெற வேண்டும் என்றும், போபிட்டிய தொகுதியின் உறுப்பினராக சேவை செய்வதாகவும், சிலர் தேவையற்ற விடயங்களை செய்வதாகவும், அவர்களுக்கு உரிய விதத்தில் வீதி மின் விளக்குகளை பொறுத்தி தருமாறும், இந்த தேவையற்ற விடயங்கள் காரணமாக பிரதேச சபையில் இருக்கும் எங்களிடையே ஒற்றுமை இல்லாமல் போகும் என்றும், அவசியம் அற்ற விதத்தில் தலையிடுதல்கள் இடம்பெறுவதற்கு விருப்பம் இல்லை என்றும் கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த பிரேரணைகளில் பிழை ஏதும் இல்லை என்றும், பிரதேச சபை கிராமங்களில் எப்படி வீதி மின் விளக்குகளை பொறுத்த வேண்டும் என்ற முடிவை எடுக்கிறது என்றும், பிரஜா சக்கி கமிட்டி பிரதேச செயலகத்தில் பதியப்பட்டு உள்ளது என்றும், கிராமத்திற்கு 04 உத்தியோகத்தர்கள் உள்ளனர் என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், அரசு என்ற ரீதியில் கொள்கைகள் எடுக்கப்படுகின்றன என்றும், கடந்த ஆட்சிகளில் கிராமிய கமிட்டிகள் இருந்தன என்றும், அவற்றிற்கு கிராமிய அங்கத்தவர்கள் இருந்தார்கள் என்றும், அவற்றில் காணப்பட்ட குறைபாடுகளை கருத்தில் கொண்டு பிரஜா சக்கி கமிட்டிகள் உறுவாக்கப்பட்டு உள்ளன என்றும், அவற்றின் குறைபாடுகளாக கிராமிய கமிட்டிகளில் முடிவுகள் எடுக்கப்பட்டாலும், கிராமிய அபிவிருத்தி கமிட்டியில் அனைவரும் சேர்ந்து திட்டம் ஒன்றை தயாரித்தாலும் அவ்வவ் அமைச்சுக்களினால் வேறு வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த பிரஜை அபிவிருத்தி கமிட்டிக்கு கிராமத்தின் பிரதேச சபை உறுப்பினருக்கும் கலந்துகொள்ள முடியும் என்றும், வீதி மின் விளக்குகள் தொடர்பில் பொதுவான அளவுகோல்களுக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் வீதி மின் விளக்குகள் பொறுத்தப்படுகின்றன என்றும், அப்போது அதுபோல் கூறும் நபர்கள் இருப்பின் அவர்களுக்கு வேண்டிய விதத்தில் செய்வதற்கு முடியாது என்றும், அரசு எடுக்கும் கொள்கை முடிவுகள், கொள்கைகள் என்ற ரீதியில் கொள்கை திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் மற்றும் தேசிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் என்றும், கட்சி அரசியல் இல்லாமல் பிரஜை அபிவிருத்தி கமிட்டி உருவாக்கப்பட்டு உள்ளது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், பிரஜா சக்தி கமிட்டி மற்றும் ஏனைய கமிட்டிகள், நலன்புரி சங்கங்கள் உத்தியோகத்தர்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டாலும் பரவாயில்லை என்றும், தொகுதியில் வெற்றி பெற்ற பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் இருக்கிறார் என்றும், அந்த பிரஜா சக்தி கமிட்டியில் எதிர்கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் இல்லை என்றும், நாங்கள் அனைவரும் செய்வது அரசியல் என்றும், ஒரு சாதாரண கோரிக்கையாக பிரதேச சபையில் இருந்து செல்லும் நிதிகள் தொடர்பாக அந்தந்த தொகுதிகளில் உள்ள பிரதேச சபை உறுப்பினர்களை தெளிவுபடுத்த வேண்டும் என்றும், உங்களுக்கு வேண்டிய அளவில் அரசின் நிதி கிடைக்கிறது என்றும், அவற்றை கிராமத்திற்கு சென்று நடைமுறைப்படுத்துவதில் பிரச்சனை ஏதும் இல்லை என்றும் பிரதேச சபையில் இருந்து செல்லும் நிதி தொடர்பாக கிராமத்தின் உறுப்பிரை தெளிவுபடுத்த வேண்டும் என்றும், இது

நடைபெற வேண்டும் என்றும், அதனால் அரசியல் ரீதியாக பாதிப்பு ஏற்படாது என்றும், பிரதேச சபை உறுப்பினர் தொகுதியில் இருக்கும் போது பிரதேச சபையில் இருந்து போகும் நிதிகள் தொடர்பாக அவருக்கு தெரியாது என்றால் அது கவலைக்குறிய நிலமை ஒன்று என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இரண்டு பிரதேச சபை உறுப்பினர்களுக்கு வீதி மின் விளக்குகள் பெற்றுக்கொடுப்பதற்கு உள்ளது என்றும், நிதி நிலைகள் கருத்தில் கொண்டு வீதி மின் விளக்குகள் கொள்வனவு செய்து கிராம உத்தியோகத்தர் பிரிவு ஒன்று உள்ளடங்கும் விதத்தில் வீதி மின் விளக்குகள் பொறுத்துதல் நடைபெறும் என்றும், அந்த சந்தர்ப்பத்தில் தொகுதி பிரதேச சபை உறுப்பினருக்கு கலந்துகொள்ள முடியும் என்றும், அப்போது பிரச்சினைகள் தோன்றுவது இல்லை என்றும் கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இதற்கு முன் வீதி மின் விளக்குகள் கிடைக்கவில்லை என்றும், ஆனால் தற்போது ஒரு தொகை வீதி மின் விளக்குகள் கிடைக்கப்பெற்று உள்ளது என்றும், தலைவர் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களில் அது தொடர்பான விடய உத்தியோகத்தர் தொலைபேசியில் தகவல் கொடுத்தார் என்றும் அது தொடர்பாக நன்றிகளை தெரிவிப்பதாகவும், விசேடமாக அந்த சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட சாரதி உட்பட அந்த ஊழியர்களுக்கு நன்றிகள் தெரிவிக்கப்பட்டன. அந்த மழை காலத்தில் உயிர் அவதானத்தை பொருட்படுத்தாது மின் இணைப்பு ஊழியர் வீதி மின் விளக்குகளை பொறுத்தினார் என்றும், விடய உத்தியோகத்தர், சாரதி, மின் இணைப்பு ஊழியர் அந்த சந்தர்ப்பத்தில் பாரிய சேவை ஆற்றினார்கள் என்றும் அவர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், அத்தியவசியம் அற்ற இடங்களுக்கு வீதி மின் விளக்குகள் பொறுத்துவது இயலாத காரியம் என்றும், இதுவரை 749 மின்குமிழ்கள் கொண்டுவரப்பட்டு உள்ளன என்றும், அந்த 749 வீதி மின் விளக்குகளும் பெறுத்தப்பட்டதன் பின்னரும் பிரச்சினைகள் உள்ளன என்றும், வருங்காலத்திலும் பிரச்சினைகள் வரும் என்றும், 10 வீதி மின் விளக்குகள் வழங்குவதை முடிவுக்கு கொண்டு வந்து ஒரு இடத்தில் இருந்து பொறுத்துவதற்கு தொடங்குமாறும், அப்போது தொகுதி உறுப்பினருக்கு அறிவிக்க முடியும் என்றும், அனைவரும் ஒன்றுசேர்ந்து அளவுகோல்களை தயாரிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், அளவுகோல்கள் தயாரித்து தகவல்கள் திரட்டுவதில் பிரச்சினைகள் எதுவும் இல்லை என்றும், இந்த அனைத்து வீதி மின் விளக்குகளும் பொறுத்தப்பட்டு இருப்பது அத்தியவசிய இடங்களில் ஆகும் என்றும், தேவையற்ற இடங்களில் பொறுத்தப்பட்டு இருப்பின் அவற்றை அகற்றுவது தொடர்பில் பிரச்சினைகள் இல்லை என்றும், பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் அபிமானம் காக்கப்படும் விதத்தில் தொகுதியில் வேலை செய்வதற்கு இடம் இருக்க வேண்டும் என்றும், நாங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரு பொது இணக்கப்பட்டிற்கு வந்து இந்த திட்டத்தை செய்துகொள்வோம் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசாந்த குமார புத்தாரச்சி அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இடர் நிலைமைக்கு முன் ஆயத்தம் ஆகுவதற்கு தண்ணீர் பவுசர்களை தயார் படுத்துவோம் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், தற்போது இருப்பது ஒரு பவுசர் என்பதால் பிரேரணை ஒன்றாக தண்ணீர் தாங்கிகள் சிலவற்றை பெற்றுக்கொள்வது உகந்தது என்றும், அப்போது தாங்கிகளை தேவைப்படும் இடங்களில் வைத்து பவுசர் மூலம் தண்ணீரை நிரப்ப முடியும் என்றும், தாங்கிகள் வைப்பதற்கு உகந்த இடங்களை இணங்கான வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், கணக்காய்வு அறிக்கை தொடர்பில் பொதுவாக நோக்கும் போது திருப்தி அடைய முடியும் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது என்றும், கணக்கிடப்பட்ட அறிக்கை ஒன்று என்றும், இதில் நிறைய குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு என்றும், அதில் ஒன்றாக நீண்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்களுக்கு உரித்தான ரூ. 4,159,491.00 மீதி அனுமதி அற்ற முறையில் திரட்டப்பட்ட நிதிக்கு மாற்றப்பட்டு இருந்தது. உரிய விதத்தில் அந்த வேலைகள் நடைபெற்று இல்லை என்றும், 2025.12.31 ஆம் திகதிக்கு பெறவேண்டிய கைத்தொழில் உதவிகள் ரூ. 27,536,409.00 தொகை பெறவேண்டிய கைத்தொழில் உதவிகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு இருந்த போதிலும் மூலதன உதவிகள் 3-81 கணக்கிற்கு செலவு வைக்காததன் காரணத்தினால் வருடத்தில் மிகை அந்த பெறுமதி குறைவாக காட்டப்பட்டு இருந்தது என்றும், 02 விடயங்கள் மட்டும் சபையின் அவதானத்திற்கு முன்வைக்கப்பட்டன என்றும், இவை பற்றி மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும், நிதி கமிட்டியில் இது தொடர்பாக கலந்தாலோசிப்போம் என்றும் மற்றும் அந்த அறிக்கையில் 3 ஆம் பக்கத்தில் 1.3 சபையின் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. மேலும் இது பற்றி விளக்கம் நிதி கமிட்டிக்கு இருக்க வேண்டும் என்றும், புத்தகங்கள் சரியான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றனவா? அங்கு செலவுகள் வெளிப்படை தண்மையுடன் உள்ளனவா, ஏறுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் கணக்குகள் பதியப்படுகின்றனவா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசந்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

**08. பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை கௌரவ சபைக்கு முன்வைத்தல்**

2026.04.01 ஆம் திகதியில் இருந்து 2026.04.30 ஆம் தகதி வரையிலான மாதத்திற்கு உரிய பிரதேச சபையின் கொடுப்பனவு அறிக்கை அனுமதி வழங்கல் மற்றும் பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை என்பன சபைக்கு முன்வைக்கப்பட்டன.

வேறு விடங்கள்

- பிரதேச சபை உறுப்பினர்களின் பிரத்தியோக தெளிவுபடுத்தல்கள்
- பிரதேச சபைத் தலைவரின் நன்றியுரை

இன்று பிரதேச சபைக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் கௌரவ உபதலைவர், கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும், ஊடகவியலாளர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கௌரவ தலைவர் தனது நன்றி உரையை முடித்துக் கொண்டார்.

பி.ப. 01.05 மணி அளவில் சபைக் கூட்டம் முடிவடைந்தது.

தலைவர்
பிரதேச சபை
பெல்மதுள்ள